உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

சிவபுராணம்

உரையுடன்

இலங்கைச் சைவமன்றம்

திருவாசச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்சகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி

எண்ணிதற் கெட்டா எழிலார் கழலிறஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாக் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் ஆமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருகியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற

தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

卐 卐 卐

உ

சிவமயம்

சிவபுராணப் பதவுரை

நமச்சிவாய வாழ்க

நமசிவாயவென்னும் திருவைந்தெழுத்து என்றும் வாழ்வதாக.

நாதன்தாள் வாழ்க

எல்லாவற்றிக்கும் தலைவனாகிய சிவபிரான் திருவடிகள் வாழ்வதாக

இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க

கண்ணை மூடி விழிக்கும் நேரங்கூட என் உள்ளத்தினின்றும் நீங்காதவனுடைய திருவடிகள் வாழ்க

கோகழியாண்ட குருமணிதன்தாள் வாழ்க
திருப்பெருந்துறையில் எழுந்தருளி அடியேனை ஆட்கொண்டருளிய குருநாதனான முதல்வனின் திருவடிகள் வாழ்க

ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்தாள் வாழ்க
சிவாகமங்களாக நிஞ்று ஆன்மாக்களை யனுகுகின்ற இறைவனுடைய திருவடிகள் வாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
ஒருவனாய் பலவடிவமுடையவனாய் உயிரெங்கும் தங்குவானுடைய திருவடிகள் வாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
ஏழையேனது மன ஓட்டத்தைக் கெடுத்து ஆட்கொண்டருளிய அரசனது திரு அடிகள் சிறப்பதாக.

பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க-
பிறவியை வேரறுக்கவல்ல சிவபெருமானுடைய வீரக்கழல்கள் அணிந்த திருவடிகள் சிறந்து விளங்குக.

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க-
அன்பிற்கும் புறம்பாக உள்ளவர்கட்கு எட்டாமலிருப்பவனது பூப்போலும் மெலலிய திருவடிகள் சிறப்பனவாக

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க-
கரம் கூப்பித் தொழுவார் உள்ளத்தில் மகிழ்தற்கேதுவாகிய அரசனது திருவடிகள் சிறப்பனவாக

(ஆகமம் - ஆன்மாக்களுக்கு மல நாசத்தைச் செய்து சிவஞானத்தை அளிப்பது. ஒரு தூர திருஷ்டிக் கண்ணாடியானது தூரத்திலுள்ள பொருட்களை அண்மைப்படுத்தி அவைகளின் உண்மையான தன்மையைக் காட்டுவதுபோல ஆகமம் அறிதற்கரிய பொருளாகிய சிவத்தின் உண்மையான தன்மையைக் காட்டும். ஆதலால், இறைவன் ஆக மங்களாக நின் அணுகுகின்றான் என்பதாம்)

சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க-
சிரமேல் கைகுவித்து வணங்குவாரை மேன்மை அடை-
விக்கும் புகழுடையானது திருவடிகள் சிறப்பனவாக

ஈசன் அடி போற்றி-
ஆண்டவனுடைய திருவடிகட்கு வணக்கம்

எந்தை அடி போற்றி-
எம் தந்தையின் திருவடிகட்கு வணக்கம்

தேசன் அடி போற்றி-
ஒளிவடிவினனாகிய சிவபெருமானுக்கு வணக்கம்

சிவன் சேவடி போற்றி-
சிவபிரானது சிவந்த திருவடிகளுக்கு வணக்கம்

நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி-
அன்பின்கண்ணே நிலைபெற்றுநின்ற தூயோனுடைய
செவ்விய பாதங்களுக்கு வணக்கம்

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி-
வஞ்சப்பிறப்பை ஒழிக்கும் வேந்தன் திருவடிகளுக்கு வணக்கம்
(நிலையற்ற பொருட்களை நிலையான பொருட்களாகவும்,
நிலையானவற்றை நிலையற்றனவாகவும் காட்டும் ஆணவத்தையு
டையஇம் மக்கட் பிறவியை வேரோடு அறுக்கும் அரசனது
திருவடிகளுக்கு வணககம்)

சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி-
சிறப்பு மிக்க பெருந்துறையின்கண் எழுந்தருளி இருக்கும்
நம் ஆண்டவனுடைய திருவடிகளுக்கு வணக்கம்

ஏகன் அனேகன்- இறைவன் தன்னிலையில் ஒருவனாய்
தன்னை வழிபடும் அன்பர் வேணடியவாறெல்லாம் உருவங்கள்
மேற்கொண்டுஅவர்க்கு அருள் செய்வானாகலின், அவன்
எடுக்கும் உவருங்களுக்கும் அவ்வுருவங்களுக்குரிய இயல்பு
களுக்கும் அளவில்லை.

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
தெவிட்டாத இன்பத்தைத் தந்தருளும் மலைபோன்றவனாகிய சிவபிரானுக்கு வணக்கம்

சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்-
சிவபிரானாகிய அவன் என் மனத்தின் கண் நிலைபெற்றிருந்தகாரணத்தால்

அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
அவனுடைய திருவருளினாலே அவன் திருவடிகளைத் தொழுது

சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை
உள்ளம் மகிழச் சிவனது அனாதி முறைமையான பழமையினை

முந்தை வினை முழுதும் ஓய யான் உரைப்பன்
முற்பிறப்பிற் செய்தவினை முற்றும் நீங்கயான் செல்லுவேன்

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்து எய்தி
சிவனது கருணையாகிய கண் வழிகாட்ட அவன் திருமுன்பு வந்து அடைந்து

(கண்ணுதலான் என்பது சிவன் என்னும் பொருளதாய் வாள பெயராய் நின்றது)

எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி
நினைத்ததற்கும் எட்டாத அழகு பொருந்திய திருவடிகளை வணங்கி

விண்ணிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
விண்ணுலகம் நிறைந்தும் மண்ணுலகம் நிறைந்தும் அப்பாலும் விளங்கித் தோன்றுகின்ற ஒளி வடிவினனே

எண் இறந்து எல்லை இலாதானே
கணக்கில்லாது வரம்பின்றி விரிந்து நிற்பவனே

நின் பெரும் சீர்
நினது பெரும் புகழினை

பொல்லா வினையேன்
தீவினையுடைய யான்

புகழும் ஆறு ஒன்று அறியேன்
புகழ்ந்துரைக்கும் வகை ஒன்றினையும் அறியாதவனாயிருக்கிறேன்.

புல் ஆகி
புல்லாகியும்

பூடு ஆய்
பூடாகியும்

புழுவாய்
புழுவாகியும்

மரமாகி
மரங்களாகியும்

பல் விருகமாகி
பல விலங்குகளாகியும்

பறவையாய்
பறவைகளாகியும்

பாம்பாகி
பாம்பாகியும்

கல் ஆய்
கல்லாகியும்

மனிதராய்
மக்களாகியும்

பேயாய்
பேய்களாகியும்

கணங்களாய்
பூதகணங்களாகியும்

வல் அசுரர் ஆகி -
வலிய அசுரராகியும்

முனிவராய் -
முனிவராகியும்

தேவராய் -
தேவராகியும்

செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
படைக்கப்பட்டு வாராநின்ற இந்த நிலையியற் பொருள் இயங்கியற் பொருள்களுள்ளே

எம்பெருமான் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் -
எம்பெருமானே, எல்லாப் பிறவிகளிலும் பிறந்து இளைப்படைந்தேன்.

மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் -
உண்மையாகவே, உன் பொன்போலும் திருவடிகளைக் காணப் பெற்று இப்பொழுது வீடு பேற்றினை அடைந்தேன்.

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற -
அடியேன் உய்யும் பொருட்டு என் மனத்தில் பிரணவ வடிவாய்நின்ற (யான் உய்வடையும் வண்ணம் ஒலிகட்கு முதலாய் எங்கும் நிறைந்திருக்கும் ''ஓம்'' என்னும் பிரணவ உருவாய் என்னுள்ளத்தின் உள்ளே நின்ற)

மெய்யா, விமலா, விடைப்பாகா -
மெய்யனே, மாசற்றவனே, இடபத்தின் மேல் எழுந்தருள்பவனே

வேதங்கள் ஐயா என -
வேதங்கள் ஐயனே என்று துதிக்க

ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே -
உயர்ந்தும் ஆழ்ந்தும் அவற்றிற்கு எட்டாமல் அகன்று நுண்ணியனாய் இருப்பவனே

வெய்யாய் -
வெம்மை யுடையோனே

தணியாய் -
குளிர்ச்சியுடையோனே

இயமானன் ஆம் விமலா -
உயிர்கள் யாவற்றுள்ளும் நின்று அவைகளை இயங்கச்செய்யும் தூயவனே (எல்லா உயிரினுள்ளும் இறைவன் கலந்து நின்றும் தனது தூய இயல்பு மாறாதவன்)

பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி -
பொய்யானவைகளெல்லாம் பொய் விலக குருவடிவில் வந்து அருள் செய்து

மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே -
உண்மையறிவாகி விளங்குகின்ற உண்மை ஒளியே

எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே -
எவ்வகை அறிவும் இல்லாதவனாகிய எனக்கு இன்பத்தைத் தந்தருள்கின்ற பெருமானே

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே -
அறியாமையை நீக்கும் நல்ல அறிவாய் இருப்பவனே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் -
ஆக்கமும் நிற்றற்குரிய ஒரு கால அளவும் முடிவும் இல்லாதவனே

அனைத்து உலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் -
எல்லா உலகங்களையும் படைப்பாய் காப்பாய் அழிப்பாய்

அருள் தருவாய் -
பிறவி அறுதற்கேதுவாகிய திருவருளைத் தந்தருள்வாய்

போக்குவாய் -
பல்வகைப் பிறவிகளிற் செலுத்துவாய்

நின் தொழும்பில் என்னைப் புகுவிப்பாய் -
நின்திருத் தொண்டைச் செய்யும் நல்ல முயற்சியில் செலுத்து வாய்

நாற்றத்தின் நேரியாய் -
பூவில் மணம் போல அடியார் உள்ளத்தில் பொருந்த இருப்ப வனே

சேயாய் -
அன்பரல்லாதவர்க்கு தூரத்திலிருப்பவனே

நணியானே -
அன்பராயினார்க்கு அண்மையில் இருப்பவனே

மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே -
சொல்லுக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்டு நின்ற மறைப் பொருளாயுள்ளவனே

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போல -
கறந்தபாலொடு சர்க்கரையினையும் தேனினையும்கலந்தாற் போல

சிறந்த அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று -
சிறந்த அடியார் உள்ளத்தில் இனிமை ஊறும்படி நிலை பெற்று

பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான் -
எடுத்த பிறவியை ஒழிக்கும் எங்கள் பெருமானே

நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் -
ஐந்து நிறங்கள் உடையவனே

விண்ணோர்களேத்த மறைந்திருந்தாய் -
தேவர்கள் நின்னை துதிக்கும்பொழுது அவர்கட்குப் புலனுகா திருந்தாய்

எம்பெருமான் -
எம்பெருமானே

வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருளை -
தீவினையுடையேனது அறிவு மறையுமாறு மூடிய ஆணவ இருளை

அறம் பாவம் என்னும் அருங் கயிற்றால்கட்டி -
நல்வினை தீவினை யென்னும் அரிய கயிறுகளால் கட்டி

புறத்தோல் போர்த்து -
வெளியே தோலைப் போர்வையாக இட்டு

எங்கு புழு அழுக்கு மூடி -
உடம்பெங்குமுள்ள புழுக்களும் அழுக்குகளும் தெரியாமல் மூடி

மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
அழுக்கு வடியும் ஒன்பது வாயில்களையுடைய உடம்பாகிய குடிசையை

மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
யான் தயங்குமாறு ஐம்பொறிகளும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால்
தடை செய்கின்ற மனத்தால்

விமலா -
மாசற்றவனே

உனக்கு கலந்த அன்பு ஆகி -
உள்ளத்துக் கலந்த அன்பினையுடையோனாகி

கசிந்து உள் உருகும் நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி -
நெகிழ்ந்து மனம் உருகி வணங்கும் நற்செயல் இல்லாத சிறியேனுக்கு கொடுத்து

நிலம் தன்மேல் வந்து அருளிநீள் கழல்கள் காட்டி -
இப் பூமியின் கண் அருட்குருவாய் எழுந்தருளி பெருமைமிக்க திருவடிகளைக் காட்டி

நாயில் கடையாய் கிடந்த அடியேற்கு -
நாயினுங் கீழ்ப்பட்டவனாய் கிடந்த அடியேனுக்கு

தாயில் சிறந்த தயாவான தத்துவனே -
தாயினும் சிறந்த அருள்வடிவான உண்மையானவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே -
குற்றமில்லாத ஒளிவிரித்த மலரின் ஒளியே

தேசனே -
ஆசிரியனே

தேன் ஆர் அமுதே -
இனிமை நிறைந்த அமுதமே

சிவபுரனே -
திருக்கைலைக்கு உரியவனே

பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே -
மும்மலக் கட்டை அறுத்துக் காக்கின்ற ஆசாரியனே

நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட -
நின்பால் நேசம் வைத்தற் கேதுவாகிய திருவருளைச் செய்து
மனத்திலுள்ள வஞ்சம் கெடுமாறு

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே -
என் நெஞ்சினின்று அகலாது நின்ற பெருங்கருணை வெள்
ளம் நிறைந்த பெரிய யாறு போன்றவனே

ஆரா அமுதே -
தெவிட்டாத அமுது போன்றவனே

அளவிலாப் பெம்மானே -
அளவிடப்படாத பெருமையுடையவனே

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே -
தன்னை நினையாதவர் மனத்தின்கண் வெளிப்படாதிருக்கும்
ஒளி வடிவினனே

நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே -
நீராக உருகச் செய்து என் அரிய உயிராகி நின்றவனே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே-
இன்பமும் துன்பமும் இல்லாதவனே உடையவனே

அன்பருக்கு அன்பனே-
அன்பு உடையார்க்கு அன்பனாயிருப்பவனே

யாவையுமாய் அல்லையுமாய் சோதியனே -
எல்லாப் பொருள்களுமாகியும் அவற்றின் வேறாகியும் நிற்கும் ஒளிவடிவினனே

துன் இருளே -
அடர்ந்த இருளாய் இருப்பவனே

தோன்றாப் பெருமையனே
அறிதற்கரிய பெருமையுடையவனே

ஆதியனே -
எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் முதலாயிருப்பவனே

அந்தம் நடு ஆகி அல்லானே-
முடிவும் நடுவும் ஆகி அவையல்லாதவனுமாயிருப்பவனே

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே -
என்னை வலிந்திழுத்து ஆட்கொண்டருளிய. எந்தையாகிய பெருமானே

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
கூரிய மெய்யறிவினால் ஆராய்ந்துபார்த்து உணர்வாருடைய உள்ளக்கருத்தினால்

நோக்கரிய நோக்கே
நோக்குதற்கு அரிதான காட்சியையுடையவனே

நுணுக்கு அரிய நுண் உணர்வே -
நுணுகி அறிதற்கரிய நுண்ணிய உணர்வுடையவனே

போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே -
இறத்தலும் பிறத்தலும் பொருந்தியிருத்தலும் இல்லாதபுனிதனே

காக்கும் எம் காவலனே -
எல்லாவற்றையும் காக்கும் எம்முடைய அரசனே

காண்பு அரிய பேர் ஒளியே -
காண்பதற்கு அரிதாயுள்ள பெரிய ஒளியே

ஆற்று இன்ப வெள்ளமே -
ஆற்று நீர்போல் பெருகும் இன்ப வெள்ளம் போன்றவனே

அத்தா -
அப்பனே

மிக்காய் -
யாவற்றிலும் மேலானவனே

நின்ற தோற்றச் சுடரொளியாய் -
நிலை பெற்ற தோற்றத்தினையுடைய சுடர்விடும் பேரொளி வடிவினனே

சொல்லாத நுண் உணர்வாய் -
சொல்லுதற்கு முடியாத நுண்ணிய உணர்வுடையோனே

மாற்றமாம் வையகத்து வெவ்வேறே வந்து
வேறுபாட்டினையுடைய இவ்வுலகத்தின் கண்ணே வேறுவேறாய் காணப்பட்டு வந்து

அறிவு ஆம் தேற்றனே -
அறிஞருக்கு அறிதலாகின்ற தெளிவானவனே

தேற்றத் தெளிவே -
அத் தெளிவுக்குத் தெளிவே

என் சிந்தனையுள் ஊற்றான -
என் மனதில் ஊற்றுப் போலச் சுரக்கின்ற

உண் ஆர் அமுதே -
உண்ணப்படுகின்ற நிறைந்த அமுதே

உடையானே -
எல்லாப் பொருள்களும் உடையவனே

வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப ஆற்றேன் -
வெவ்வேறு விகாரங்களையுடைய தசை உடம்பினுள்ளே
தங்கி கிடத்தலைப் பொறுக்க மாட்டேன்

எம் ஐயா -
எம் தலைவனே

அரனே -
சிவபெருமானே

ஓ என்று என்று -
ஓ என்று பலகால் அரற்றி

போற்றிப் புகழ்ந்திருந்து -
வணங்கிப் புகழ்ந்து பாடியிருந்து

பொய் கெட்டு மெய்யானார் -
நிலையில்லாத நினைவு சொல் செயல்கள் நீங்கப் பெற்று
மெய்நினைவு சொல் செயல்கள் உடையராயினர்

மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே -
திரும்பவும் இவ்வுலகில்வந்து இருவினைக்கு ஏதுவாகிய பிற
வியைக்கூடாமல்

கள்ளப் புலக் குரம்பை கட்டு அழிக்க வல்லானே -
வஞ்சித்து கொள்ளுதலைச் செய்யும் ஐம்புல அவாக்களுக்கு
இருப்பிடமான சிறு வீடாகிய இவ்வுடம்பின் கட்டை அழிக்க
வல்லானே

நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே -
நடு இரவில் திருக்கூத்தினைப் பலகாலும் ஆடும் தலைவனே

தில்லையுட் கூத்தனே -
தில்லைக்கண் கூத்தினை இயற்றுவோனே

தென் பாண்டி நாட்டானே -

தெற்கேயுள்ள பாண்டி நாட்டை உடையோனே

அல்லல் பிறவி அறுப்பானே -
துன்பத்திற்கிடமான பிறவிவேரை அறுப்பவனே

ஓ வென்று
ஓ வென்று அரற்றி-

சொல்லற்கு அரியானை சொல்லி -
சொல்லிப் பாராட்டுவதற்கு அரியவனை இயன்ற மட்டும் புகழ்ந்து சொல்லி

திருவடிக் கீழ்ச் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லு வார் -
திருவடிக் கீழ் நின்று சொல்லிய பாட்டின் பொருளை உள்ளு ணர்ந்து சொல்ல வல்லவர்

சிவ புரத்திற் செல்வர் -
சிவலோகத்தின்கட் செல்வார்கள்

பல்லோரு மேத்தப் பணிந்து சிவனடிக் கீழ் உள்ளார் -
பலரும் வழுத்தா நிற்க தாம் பணிவுடையராய் சிவபிரான் திருவ டிக் கீழ் இன்புற்று இருப்பர்

திருச்சிற்றம்பலம்